**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.11/2023 தேதி-10.12.2024
(P.W.1) - துரைராஜ்
குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வழக்குச் சொத்தை அளக்க கல்குளம் சர்வேயரை வைத்து ஜனவரி மாதம் 2020-க்கு பிறகு அளக்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. 22.01.2023 அன்று வழக்கு சொத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. 22.01.2023 அன்றோ அதற்கு பிறகோ நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் கொடுத்தேன். 22.01.2023 அன்று புகார் கொடுத்ததாக என்னுடைய பிராதில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த வரைபடமும் இணைப்பில் இல்லை என்றால் சரிதான். நான் வட்டாச்சியர் அலுவலகம் வழியாக FMP வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை அளந்து வரைபடம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 22.01.2023 அன்று வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வடக்கு எல்கை கற்களை பிரதிவாதிகள் சேதப்படுத்தினார்கள் என்று சொல்வது வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சம்மவங்கள் ஜோடிக்கப்பட்டது என்பதால்தான் நான் காவல்நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

2. 22.01.2023 அன்று எந்த சம்மவமும் நடைபெறாததால்தான் அது சம்மந்தமாக எந்த புகைப்படமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் நான் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். ஆனால் அதை எவ்வாறு எழுதியிருக்கிறார் என்று தெரியாது. பிராதில் 3-வது பக்கத்தில் 12 வது வரியில் சொத்தை அபகரிக்க முயற்சித்ததன் மூலமாக 22.01.2022 அன்று புகார் கொடுத்தேன் என்றால் இதுவரை ஓரேயொரு புகார் மட்டும் கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணத்தில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 09.01.2020. அதைத்தவிர வேறு எந்த புகாரும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.